# புறப்பாடலில் காணலாகும் விழுமியங்கள்

***து. காயத்ரி***
முனைவர்பட்ட ஆய்வு மாணவி
அரசு ஆடவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நந்தனம்

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7713

***ஆய்வுச்சுருக்கம்***

*தனிமனிதன் குடும்பம், சுற்றம். அரசு என ஒரு வலுவான பழக்கவழக்கங்களைக் கடைபிடித்ததினால் தான் இன்றளவும் இச்சமூகம் எத்தகைய அறிவியல் மாற்றத்திலும் தனக்கான ஓரிடத்தைப் பெற்றுள்ளது. இத்தகைய கருத்தை அடியொற்றிய புறநானூறு என்று வரலாற்றுக் கருவுலமான சங்க இலக்கிய நூலிலிருந்தும் ஒருசில சான்றுகளை எடுத்துக்காட்டி இக்கட்டுரை கட்டமைக்கப்பட்டுள்ளது.*

## முன்னுரை

பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தாலும் ஒரு சமூகம் எத்தகைய மாற்றங்களைக் கொண்டாலும் தனக்கான ஒரு வரையறையையும் நெறிமுறைகளையும் வகுத்து இன்றளவும் வேறூன்றி இருப்பதற்கு ஒரே காரணம், நம் முன்னோர்கள் கடைபிடித்த ஒழுகலாறுகளும் பழக்கவழக்கங்களுமே என்று கூறலாம். அதையே நம் இலக்கியங்களும் பிரதிபலிக்கின்றன. புறம், அகம் அல்லாத அனைத்தையும் இவை எடுத்துக்காட்டுகின்றன. மனிதனைச் சீரமைப்பதற்கான ஒழுங்கமைப்பு கருத்தியல் வழியிலான சில வரன்முறைகளை இச்சமூகம் எவ்வாறு ஏற்படுத்தி உள்ளது என்பதையே இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது.

## தனிமனித விழுமியம்

தனிமனித ஒழுக்கமே ஒரு குடும்பத்தை, சமூகத்தைக் கட்டமைக்கிறது எனலாம். உயர்பண்புகளுடன் வாழ்தல், எல்லோரையும் குடும்பமாகப் பாவித்தல், பிறருக்குக் கொடுத்து உதவுதல், விருந்தோம்பல், அறவழியில் நடத்தல் போன்ற கூறுகளை ஒவ்வொரு மனிதனும் பெறும்போது அச்சமூகமும் அவ்வாறே பிரதிபலிக்கின்றன. மனிதனின் செயல்பாடுகளினாலும் வளர்நிலைகளினாலும் கிடைக்கும் பெருமையைப் போற்றிப் புகழுமாறு அச்சமூகமே உயர் பண்புநெறிகளைத் தனிமனிதனுக்கு உரிய அறமாகப் போற்றவும் போதிக்கவும் செய்கிறது. தனிமனித ஒழுக்கப் பண்பாட்டுக் கூறுகளே சமூக முன்னேற்றத்திற்கு பெரும்பங்கு கொண்டு சரியான பாதையில் மனிதனை பயணிக்கச் செய்கிறது.

**புறநானூற்றில் உள்ள அறநெறிகள்**

சமுதாயத்திற்குத் தேவையான தனிமனித ஒழுக்கம் வாழ்க்கை பிரதிபலிப்புகள், அறநெறித் தத்துவங்கள், சமூக வாழ்வாதாரத்தைப் பிரதிபலிக்கும் அறிவுப்பெட்டகம் என்றால் அது புறநானூறு எனலாம். வீரம், கொடை மட்டுமே புறநானூறு சுட்டும் என்ற பொதுவான செய்தியை விடுத்து ஒரு மனிதன் எவ்வாறு வாழ்ந்தான்? தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள மக்களையும் எவ்வாறு பேணிப்பாதுகாத்தான் என்பதையும் கூறுகிறது.

**ஒழுக்கம்**

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப ஒழுக்கம் உயிருக்கு மேலானதாகக் கருதி வாழ்ந்தனர்.

**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின், அதுதான்**
**எல்லாரும் உவப்பது அன்றியும்**
**நல்ஆற்றுப் படூஉம் நெறியும் மார் அதுவே**
**195 – நரிவெரூஉத்தலையார்**

நல்ல பண்புகளை உடையவரே, தன் இறுதிக்காலத்தும் நல்வினைகள் செய்ய மாட்டீராயினும் தீவினைகளையாவது செய்யாது விலக்குங்கள். அச்செயல்தான் எல்லோராலும் புகழப்படுவது. உங்களை நன்னெறியில் வழிநடத்துவதும் அதுவேயாகும் என்றார். தீமை செய்யக்கூடாது என்றால் அவன் நன்மை மட்டுமே செய்வான். இதனையே இப்பாடலும் கூறுகிறது.

**இல்லறத்திலும் நல்லறம்**

ஓர் ஆடவனின் உழைப்பும் முயற்சியும் சமூகத்தில் முக்கிய இடம் பெறுகிறது. குடும்பமாகிலும் சமூகமாகிலும் நாடாகினாலும் ஆடவனின் உயரிய சிந்தனையால் வழி நடத்தப்படுவதால் அவனது ஒழுக்கம் இன்றியமையாததாகிறது. ஆண்மகன் நல்லவனாகவும் ஒழுக்க வாழ்வைக் கடைபிடிப்பவனாகவும் உள்ள நாடே வளம் செழிக்கக்கூடியதாகவும் உயர்ந்த நிலையில் அமையக் கூடியதாகவும் இருக்கும். இதனையே ஔவையாரும்,

**நாடா கொன்றோ! காடா கொன்றோ**
**அவலா கொன்றோ! மிசையா கொன்றோ!**
**எவ்வழி நல்லவர் ஆடவர்,**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே!**

என்று கூறுகிறார். நாடாக இருந்தாலும் காடாக இருந்தாலும் மேடாக இருந்தாலும் பள்ளமாக இருந்தாலும் அங்கு வழிநடத்திச் செல்லும் ஆடவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். உயர்ந்த பண்பையும் ஒழுக்கநெறியையும் கொண்ட ஆடவனின் ஆளுமைத்திறன் பண்படாத சமூகமாக இருந்தாலும் பக்குவப்பட்ட சமூகமாக மாற்றமுடியும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. சிறந்த பண்புநெறிகளைக் கொண்ட மனிதர்களே நல்லவர்களாகவும் சமூகத்தில் பொறுப்பானவர்களாகவும் அடையாளப் படுத்தப் படுகிறார்கள். மன்னர்களின் அரசாட்சியில் தவறு நேருகின்ற போதும் புலவர்களாலும் பெரியோர்களாலும் சுட்டிக்காட்டப் படுகின்றது.

**அறம் வழிநடத்தல்**

அரசன் என்னும் தனிமனிதக் குறியீடு ஒட்டுமொத்த சமூகத்தையும் உள்ளடக்கியுள்ளது என்பதனால் மன்னன் என்னும் அதிகார மையத்திற்கு அறக்கருத்துகள் உணர்த்தப்பட்டன.

**நான்குடன் மாண்டது ஆயினும், மாண்ட**
**அறநெறி முதற்றே அரசின் கொற்றம்**
**அதனால், நமர் எனக் கோல்கோடாது**
**பிறர் எனக் குணம் கொல்லாது**
**55 – மருதன் இளநாகனார்**

என்ற புறநானூற்றுப் பாடலானது வலிமையான நான்கு படைகள் கொண்டு இருந்தாலும் அறநெறி வழியாகச் செயல்படுதலே நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்க முடியும் என்று கூறுகிறார் மருதன் இளநாகனார். நல்லதையே செய்து

*நல்லதையே நினைக்கும் உயர் பண்பு, சங்க காலத்திற்குப் பின்பு நிலைத்த பண்பாக உருவெடுத்தது. "பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே!பகைவனுக்கருள்வாய" என்னும் மனித உயர்பண்பையும் புறநானூற்றில் காணலாம். பிறர்மேல் கொள்ளுகின்ற பொறாமை, தேவையில்லாமல் அளவுக்கு அதிகமாகக் கொள்ளும் பேராசை, அதிகப்படியான கோபம், தீயாகும். இந்நான்கினையும் தவறுதான் என்று மனம் உள்வாங்கிக் கொள்ளுமானால் அந்த மனித மனம்அறத்தோடு செயல்படுகிறது எனலாம். வாழ்வில் உயர்ந்த ஒழுக்கமாக அறம் என்ற நற்பண்பைக் கருதலாம். தன்னெஞ்சே தன்னைச்சுடும் என்பதில் தன்நெஞ்சு என்ற தூய களம்தான் நல்ல அறம் விளையும் களமாக அமைந்துள்ளது. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பதைப்போன்று,*

***வாழ்தல் வேண்டின்***
***பொய் கூறேன் மெய் கூறுவல்***
***139 – புறம். மருதன் இளநாகனார்***

*வாழ்க்கையின் தேடலுக்காகப் பலவழிகளில் முழுமையை அடைய முடியும் என்று இருந்தாலும் வாய்மையே பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்ந்து காட்டிய பெருமை சங்க காலத்திலிருந்து தொன்றுதொட்டு வரக்கூடிய நம் முன்னோரின் மரபு என்பதை காட்டுகின்றது. பொய்கூறமாட்டேன்என்றுபிரகடனப்படுத்தும் தனிமனித வாழ்நெறி உயர் பண்பாகக் கருதப்படுகிறது.*

### அனைவரையும் நேசித்தல்

*தன்னை நேசித்தல், தன்னைப்போன்ற இன்னொருவனை நேசித்தல், நம்மைப் போல் உள்ள உயிரினங்களை நேசித்தல் என்ற நிலையில் நேசித்தல் என்ற பண்பு அனைத்தின் மீதும் நிகழ்கிறது. முகம் தெரியாத யாரோ ஒருவர் மீதும், இனம் தெரியாத ஏதோ ஒரு உயிரின்மீதும் செலுத்துகின்ற அன்பு, நேசம் இவற்றைக் காட்டிலும் எதிரிகள், பகைவர்களை மன்னிக்கும் செயலே உயர் பண்பாகக் கருதப்படுகிறது.*

***உண்டால் அம்ம இவ்வுலகம் – இந்திரர்***
***அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத்***
***தமியர் உண்டலும் இலரே முனிவிலர்***
***துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவது அஞ்சிப்***
***புகழ் எனின், உயிரும் கொடுக்குவர், பழியெனின்***
***உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்***
***அன்னமாட்சி அனையராகித்***
***தமக்கு என முயலா நோன்தாள்,***
***பிறர்க்கு என முயலுநர் உண்மையானே***
***182 – புறம். கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி***

*என்ற பாடலானது ஓர் அரசன் தன் மக்களைப் பற்றிக் கூறியது.*

1. *அமிழ்தமே கிடைத்தாலும் தனியே உண்ணாதவர்*
2. *வாழ்க்கையில் வெறுப்பில்லாதவர்*
3. *மனச்சோர்வு இல்லாதவர்*
4. *தீய செயலுக்கு அஞ்சுவர்*
5. *புகழ் என்றால் உயிரும் கொடுப்பர்*
6. *பழி என்றால் உலகத்தையே பெற்றாலும் கொள்ளமாட்டார்.*
7. *மனக்கவலை இல்லாதவர்.*

*இத்தகையபண்புஉடையவராய்த்தமக்கு என எதற்கும் முயற்சி செய்யாது பிறருக்காகவே முயற்சி செய்பவர்கள் இருப்பதால் இவ்வுலகம் சிறப்பாக இருக்கிறது.*

***யாதும் ஊரே யாவரும் கேளிர்***
***தீதும் நன்றும் பிறர்தர வாரா***
***நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன***
***சாதலும் புதுவது அன்றே வாழ்தல்***
***இனிது என மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்***
***...***
***பெரியோரை வியத்தலும் இலமே***
***சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே***
***– 192 புறம். கணியன் புங்குன்றனார்***

*இப்பாடலிலிருந்து பெறும் கருத்துக்களாவன:*

*தமிழ்ப் பண்பாட்டிற்கு உலக அளவிலான பெருமையைத்தேடித்தந்துள்ள*

பாடல் இன்றும் ஜப்பான் நாட்டில் நாடாளுமன்றக் கட்டிடத்தில் எழுதப் பட்டுள்ள முதல் வாசகம் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதாகும்.

எல்லோரையும் தன் உறவினராகவும் எல்லா ஊரையும் தன் ஊராகவும் நினைக்க கூடிய இவ்வரிகளே தமிழ்ப்பண்பாட்டிற்கு உலக அளவிலான பெருமையைத் தேடித் தந்திருக்கிறது. பல ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் இன்றும் நம் பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கின்றன.

நன்மையும் தீமையும் பிறரால் வருவதில்லை. நோதல் என்று சொல்லப்படும் துன்பமும் அதனைத் தாண்டிய தணிதலும் பிறரால் வருவதில்லை. இறப்பு என்பது புதிதாகத் தோன்றுவதில்லை. உலக வழக்கில் இயல்பானதே. வாழும் வாழ்க்கையில் அவ்வப்போது கிடைக்கும் குறைந்த இன்பத்தைக் கொண்டு மகிழ்வதும் உண்டு. அதனால் மகிழ்வும் இல்லை. வெறுப்பும் அடைவதும் இல்லை. ஊழியின் வழியே உயிர் செல்கின்றது.

நல்லது செய்தாரென ஒருவரைப் பாராட்டலும் தீது செய்தாரென ஒருவரை இகழ்தலும் இல்லாதவர். தங்களுக்கென உறவெல்லையை வகுத்துக்கொண்டு வாழ்ந்த தொல்குடி மக்கள் தங்கள் உறவெல்லையை வகுத்துக்கொண்ட வேந்தன் ஆளும் மண்ணின் மைந்தர்களாக எழுச்சி பெற வேண்டும் என்ற அடிப்படையில் இப்பாடலில் ஒவ்வொரு அடிகளும் சுட்டிக்காட்டுகின்றன.

## தொகுப்புரை

தனிமனித உயர்பண்பு நெறிகள் சமுதாய வளர்ச்சியில் பங்குகொண்டு சமுதாய நீரோட்டத்திற்குத் துணை புரிவதால், அவற்றைச் சமுதாயத்தில் விளையும் விழுமியங்களாக அடையாளப் படுத்தப்படுகிறது.

மனமுவந்து கொடுத்து, மனநிறைவுடன் பெற்றுக் கொள்ளும் அருளுள்ளம் தமிழர்களிடம் அதிகமாகக் காணப்பட்டதால் ஈகையின் தன்மை சிறப்புடன் காணப்பட்டது.

மனிதனை நேசிக்கும் உணர்வை மேம்படுத்தி மனித நேயத்தை வளர்க்கும் உயர் பண்பாட்டை உலகிற்கு அறிமுகப் படுத்தியவர்கள் தமிழர்களே என்றால் மிகையல்ல.

புகழ் எனின் உயிரையும் கொடுத்து பழி எனின் உலகையே கொடுத்தாலும் கொள்ளாது பழிக்கஞ்சும் பண்பு தனிமனிதப் பண்பாட்டில் குறிப்பிட்ட ஓர் இடத்தைப் பெற்றுள்ளது.

நிலத்திற்கு ஏற்றவாறு மக்கள் வாழ்க்கைமுறை இருந்தாலும் பண்பாலும் பழக்கத்தாலும் அனைவரும் ஒற்றுமையுடனும் விருந்தோம்பல் அமிழ்தமேயாயினும் அனைவருடனும் பங்கிட்டு வாழ்ந்த வாழ்க்கை முறை ஆகியவற்றைக் கூறுகின்றது.

## முடிவுரை

தனிமனிதனுக்கு உண்டான புறநானூற்றுப் பண்புநெறிகள் மன்னராட்சியில் பதிவு செய்யப்பட்ட போதும் இன்றளவும் வாழ்க்கையோடு இணைத்துக் கொள்ளும் பண்பாகவே இப்பாடலடிகள் உணர்த்துகின்றன. அறம் பற்றிய சிந்தனையும் அறத்துடன் வாழ்தலே தம் வாழ்க்கை நெறியென வாழ்ந்த சான்றோர்களின் வாக்குகளை நாமும் கற்று இச்சமூகம் இன்னும் தன் சுயாதீனத்தை இழக்காமல் இருக்க வேண்டும் என்பதை இக்கட்டுரையின் முடிவாகக் கொள்ளலாம்.

## துணைநூற்கள்

1. சங்க இலக்கியம் - அகநானூறு, புறநானூறு (தொகுதி 3) மணிவாசகர் பதிப்பகம் அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் முதற்பதிப்பு 21 சுன் 2010.